10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 242 ஞாயிற்றுக்கிழமை ஜனவரி 21 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## தடை நீக்க வருகிறது புதிய சட்டம்

கொழும்பு, ஜன. 21

ஊழல், மோசடிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின்போது ஏற்படும் தடைகளை நீக்க புதிய சட்டங்கள் வகுக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதற்காக விசேட மேல் நீதிமன்றம் ஒன்றை அமைக்கவும் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 7 வருடங்கள் வரை தாமதமடைந்த வழக்குகளை 6 மாதங்களுக்குள் விசாரித்து தீர்ப்பு 06▶

# ரயிலை மறித்து மக்கள் தண்டவாளப் போராட்டம்





வவுனியா, ஜன.21

வவுனியாவின் பாரம்பரியக் கிராமங்களான விளாத்திக்குளம், அரச முறிப்பு ஆகியவற்றுக்கு செல்லும் பிரதான வீதியை மூடி ஓமந்தை ரயில் நிலையம் அமைக்கப்பட்டமையைக் கண்டித்து கொழும்பு - யாழ். கடுகதி ரயிலை மறித்து அந்தக் கிராமங்களின் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற கடுகதி ரயில், ஓமந்தைப் புகையிரத நிலையத்தில் சுமார் 2 மணி நேரம் தரித்து நிற்க வேண்டியேற்பட்டது.

"சுமார் 300 வருடங்கள் பழைமை வாய்ந்த எமது கிராமங்களுக்கு செல்லும் பிரதான வீதியை, ஓமந்தை ரயில் நிலையம் அமைக்கும்போது தற்காலிகமாக மூடுவதாகவே தெரிவித்தனர். எனினும் இரவோடு இரவாக எமது வீதியை மூடி, ரயில் நிலையத்தை அமைத்தனர்.

கடந்த 7 வருடங்களாக நாம் இவ் வீதியை திறந்து விடுமாறு பிரதமர் உட்பட ரயில் திணைக்கள அதிகாரிகள் என பலருக்கும் 06▶

# சிவராம் கொலையாளிகள் கூட்டமைப்புக்குள்ளேயே



### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. பகிரங்க சாடல்

வவுனியா, ஜன. 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்குக் காரணமான ஊடகவியலாளர் சிவராமை கொன்றவர்களும் கூட்டமைப்பிலேயே உள்ளனர் எனப் பகிரங்கமாக சாடியிருக்கிறார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன.

வவுனியா பாவக்குளத்தில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து நடத்திய மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடனும் பொட்டம்மானுடனும் பேசி ஆயுத பலம் உச்சத்தில் இருக்கின்ற நிலையில் எமது 06▶



## கட்சி தாவுகிறார்? கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி.

வவுனியா, ஜன. 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் தம்முடன் இணைவார் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா பாவக்குளத்தில் போட்டியிடும் அவரது கட்சியினரை ஆதரித்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"ரெலோவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் உள்ளூராட்சித தேர்தல் முடிந்ததும் நாங்களும் உங்களுடன் வந்துவிடுவோம்" எனத் தன்னிடம் தெரிவித்தார் என சிவசக்தி ஆனந்தன் எம்.பி. இதன்போது மேலும் குறிப்பிட்டார்.(ச)

## அம்பாந்தோட்டையில் சீன கடற்படைத்தளம்

### இந்தியாவில் ஜப்பான் தளபதி எச்சரிக்கை

புதுடில்லி, ஜன. 21

இராணுவ முன்னெடுப்புக்கான காத்திரமான நகர்வுக்காகவே சீனா அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குப் 06▶

## கைவிடப்பட்டதா தமிழீழம்? அதை மக்கள் சொல்லட்டும்

### சுமந்திரனுக்கு உருத்திரகுமாரன் சாட்டை

றொறன்டோ, ஜன. 21

தமிழீழக் கோரிக்கை கைவிடப்பட்டு விட்டதா என்பதை மக்கள் கூறட்டும். தமிழீழ இலட்சியத்தைக் கைவிடும் ஆணை உங்களுக்கோ அல்லது வேறு எந்தத் தமிழ்த் தலைவர்களுக்குமோ கிடையாது என சுமந்திரன் எம்பிக்கு சாட்டையடி கொடுத்திருக்கிறார் தமிழீழ நாடு கடந்த அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன்.



06▶

## ஈ.பி.டி.பி. வேட்பாளர் கைது

சாவகச்சேரி, ஜன. 21

நீதிமன்றப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஈ.பி.டி.பி. வேட்பாளர் ஒருவரை நேற்று கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி அல்லாரை கிராம பிரதேச சபை வேட்பளரான கந்தையா் சிவாஜி என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைதானவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் இருந்த போக்குவரத்து தொடர்பான வழக்கிலேயே பிடியாணை பிறப்பிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். (ச)

## ஐ.தே.க. தேர்தலில் வென்றால் வடக்கு–கிழக்கு இணையும்



மட்டக்களப்பு,ஜன.21

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்றால் வடக்கு-கிழக்கு நிச்சயம் இணைக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் 06▶

## அரசின் மோசடிகளை மறைக்கவே கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி தலைமை



வாழைச்சேனை, ஜன. 21

அரசாங்கத்தின் மோசடிகளை மூடி மறைப்பதற்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, எதிர்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட்டது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 06▶




உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# வறுமைக் குடும்பத்துக்கு வீடு கொடுத்த பொலிஸார்



முல்லைத்தீவு, ஜன.21

அடிப்படை வசதிகளற்ற தற்காலிக கூடாரத்தில் வசித்த குடும்பமொன்றுக்குப் பொலிஸார் புதிய வீடு ஒன்றைக் கட்டி வழங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வள்ளிபுனம் கிராமத்தில் தற்காலிக கொட்டிலில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வசித்துவரும் அன்ரனிதாஸ் என்பவரின் குடும்பத்துக்கே இந்த வீட்டைப் பொலிஸார் கட்டிக்கொடுத்துள்ளனர்.

இந்த வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. இதன்போது குறித்த வீட்டினை பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, நாடாவெட்டி திறந்து வைத்ததுடன், வீட்டின் திறப்பினையும் குடும்பத்தினரிடம் கையளித்தார்.

இதன்போது குறித்த கிராமத்தில் வறுமையில் வாழும் மக்கள் சிலருக்கு உலர் உணவுப்பொருட்களையும் பொலிஸ் மா அதிபர் வழங்கிவைத்தார். (அ)

# அத்தநாயக்கவுக்கு மீண்டும் அரசியல் ஆசை

கொழும்பு,ஜன.21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் மீண்டும் அரசியலில் பிரவேசிக்க உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

"எந்தக் கட்சிக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து நான் இன்னும் முடிவெடுக்கவில்லை. எனினும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை பார்த்து, அவரது வேலைத்திட்டம், நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிறந்த கொள்கைகளை நடைமுறைப்படுத்துபவராக இருந்தால், நானும் என்னுடைய [illegible]க்கும் பெருந்தொகையான ஆதரவாளர்களும் அவரை ஆதரிப்போம்" எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ)



# காலணியால் அதிருப்தி

கிளிநொச்சி,ஜன.21

பொங்கல் நிகழ்வில் படையதிகாரி ஒருவர் காலணியோடு, பொங்கல் பானைக்கு அரிசி இட்டமை அதில் கலந்து கொண்டோர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் அறுடை மற்றும் பொங்கல் நிகழ்வு கிளிநொச்சி வட்டக்கச்சிப் பண்ணையில் நேற்று இடம்பெற்றது.

இதில் முன்னதாக நெல் அறுவடை நிகழ்வும் பின்னர் பொங்கல் நிகழ்வும் இடம்பெற்றன.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்திரட்ண பல்லேகம இவ்விரு நிகழ்வையும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட விருந்தினர்கள் முறைப்படி நிகழ்வில் கலந்துகொண்டனர். சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கிளிநொச்சி கட்டளை அதிகாரி மேஜர் சாகர பொங்கல் பானைக்கு அரிசி இடும் போது காலணியைக் (சப்பாத்து) கழற்றவில்லை. இது நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் சலசலப்பையும் எரிச்சலையும் ஏற்படுத்தியது. (அ)

# ரணிலுக்குச் செய்த தவறை மீண்டும் நாம் விடக்கூடாது



யாழ்ப்பாணம், ஜன.21

"2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்காமல் விட்ட தவறை, தமிழ் மக்கள் மீளவும் செய்யக்கூடாது. தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமிழ் மக்களது தேவைகள் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தாது அன்றும் வாய்கட்டப்பட்டவர்களாகவே இருந்தார்கள். இன்றும் அவ்வாறே இருக்கின்றனர். இந்த நிலையில் தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்" என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலுக்கான ஐ.தே.கவின் விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"எமது கட்சியின் தலைமையில் அரசு அமைக்கப்பட்டவுடன் நடைபெற்ற முதலாவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டது. அது தற்போது வடக்கு கிழக்கு முழுவதும் தமிழில் இசைக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களின் பல்லாயிரம் ஏக்கர் காணிகள் மீளக் கையளிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கேப்பாபிலவு, வலிவடக்கு, சம்பூர் போன்ற பிரதேசங்களில் மக்களது காணிகள் பல மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வாழ்வாதார மேப்பாட்டுக்காக 10 இலட்சம் ரூபா நிதி கிராமங்கள் தோறும் ஒதுக்கப்பட்டு அவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றைவிட வீடமைப்புத் திட்டங்கள், சுகாதார போஷாக்குத் திட்டங்கள், பெண்களுக்கான உதவித்திட்டங்கள், கல்விக்கான உதவித்திட்டங்கள், விவசாயிகளுக்கான உதவித்திட்டங்கள் போன்றன வழங்கப்பட்டு வருகின்றன.

இவையாவும் நல்லாட்சி அரசாங்கத்தை நாம் ஆட்சிக்கு கொண்டு வந்ததன் ஊடாக குறுகிய நாட்களில் செய்த வேலைத்திட்டங்களாகும். எனவே இம் முறையும் இவ் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியினை வெற்றி பெறச் செய்வதனூடாகவே கிராமிய அபிவிருத்தியுடன் மக்களின் அனைத்துத் தேவைகளுக்கும் அரசாங்கத்துடன் நேரடியாக பேசக் கூடிய ஓர் நிலையை உருவாக்க முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகளில் முள்ளிவாய்க்காலில் எமது உறவுகளை நினைவுகூர முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. மாவீரர் தினத்தைக் கடைப்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 2009ஆம் ஆண்டு மே 18வரை முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதிப் போரில் எமது உறவுகள் பலர் உயிரிழந்தனர். அப்போது 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு -கிழக்கில் இருந்தனர். எனினும் அந்த மக்களுக்காக அவர்கள் குரல் கொடுத்தார்களா? என மக்கள் சிந்திக்க வேண்டும்.

அவர்களில் சிலர் இன்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். சிலர் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தனர். இவர்கள் அனைவரும் சேர்ந்தே தற்போது உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்கள் இன்று பல்வேறு கருத்துக்களை வெளியிடுகின்றனர். அன்று மக்களுக்காக குரல் கொடுக்க முடியாதவர்களை நாம் இன்று ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்கட்டப்பட்ட நிலையில் தான் அன்றும் இருந்தார்கள் இன்று இருக்கிறார்கள்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)




எதிரொலி
Ethiroli
ஞாயிறு, 21 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

# மகிந்த வருகிறார்

ஜனாதிபதி பதவியை இழந்த பின்னர் முதன்முறையாக யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார் மகிந்த ராஜபக்ச. ஜனாதிபதியாக இருந்தபோது அவர் வந்தமைக்கும், இப்போது வருவதற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. அப்போது அதிகாரம் அவர் கையில் இருந்தது. நாடு முழுதும் இராணுவ ஆட்சி நிகழ்வது போன்ற சூழல். யாரும், எதையும் தம்மிஷ்டப்படி கதைக்க முடியாது. மகிந்தவும், அவர் குடும்பமும் என்ன சொல்கின்றனரோ அதைத்தான் நாட்டு மக்கள் அனைவரும் செய்தாக வேண்டும். இப்படிப்பட்ட சர்வதிகாரங்கள் கொண்ட மாமன்னராக மகிந்த வந்த காலங்களில் அவரை எதிர்த்து எவரும் மூச்சுக் கூட காட்டவில்லை காட்டவும் அனுமதிக்கப்படவில்லை. அதையும் மீறி யாரும் எதிர்ப்புக் காட்டியிருந்தால், அடுத்த பொழுது விடிவதற்கிடையில் வெள்ளைவானில் அவர் ஏற்றப்பட்டிருப்பார். சில நாள்களில் சித்திரவதைக் காயங்களோடு உடலம் எங்காவது எறியப்பட்டிருக்கும். எனவே வாய்மூடி மௌனிகளாக இருப்பதே அப்போது பாதுகாப்பானதாக இருந்தது.

இருப்பினும் தான் வருகின்ற போதெல்லாம் யாழ்ப்பாண மக்கள் காட்டுகின்ற மரியாதையும், வரவேற்பும் வெளிவேடமே என்பது மகிந்தவுக்கும் நன்கு தெரிந்தேயிருக்கும். ஏனெனில் அவர் பிரதமராக இருக்கையில் இங்கு வந்தபோது, எப்படிப்பட்ட வரவேற்புக் கிடைத்தது என்பதை அவர் ஆயுளிலும் மறக்கமாட்டார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்க தன் சகா விமல் வீரவன்சவையும் இழுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்திறங்கிய மகிந்த, வடமராட்சியில் உள்ள நலன்புரி நிலையம் ஒன்றுக்குச் சென்றபோது, மக்கள் அவருக்கு விளக்குமாற்றைக் காட்டி, கத்திக் கூச்சலிட்டு அனுப்பினர். அந்த அவமானம் தாங்க முடியாமல், யாழ்.செயலகத்தில் நடக்க இருந்த கூட்டத்துக்கும் போகாமல் அப்படியே பலாலிக்குப் போய், விமானத்தில் ஏறிப் பறந்தோடியிருந்தார் மகிந்த. அந்த அவமானத்தை மகிந்த ஜென்மத்துக்கும் மறக்க முடியாது.

அதன் பின்னர் ஜனாதிபதியாக யாழ்ப்பாணம் வருகின்ற போதெல்லாம் விளக்குமாற்று வரவேற்பு அவர் மனக்கண்ணில் வந்திராமல் போயிருக்காது. இப்போதும் கிட்டத்தட்ட அதேபோன்ற ஒரு சூழலிலேயே மகிந்தவின் வருகை நிகழவுள்ளது. அதிகாரமற்ற ஒருவராக, வாக்குப் பிச்சை கேட்க பெப்ரவரி முதலாம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு அவர் வரவுள்ளார். தாமரை மொட்டுச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பேச வரும் மகிந்த ராஜபக்சதான், தமிழ் மக்கள் பட்ட பேரவலத்துக்கு முழுமுதற் காரணம். இன்னமும் அவரால் உண்டான வலிகள் மறையவில்லை. மகிந்தவும், அவரது சகோதரர்களும் இட்ட கட்டளைகளே பல்லாயிரம் மக்களைக் கொத்துக் கொத்தாக கொன்றொழித்தன. இன்னும் ஆயிரக் கணக்கானோரை காணாமல் ஆக்கின. இன்னும் ஆயிரக் கணக்கில் அங்கவீனர்களை உருவாக்கியது. அந்த வலியில் இருந்து இன்னும் தமிழினம் முழுமையாக மீளவில்லை. கண்ணீரோடு இப்போதும் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் போராட்டங்கள் தொடர்கின்றன. அந்தப் போராட்டங்கள் நடைபெறும் இடங்களைத் தாண்டியே மகிந்த யாழ்ப்பாணத்துக்கு வரவேண்டும். சிலவேளைகளில் அதைத் தவிர்த்து, விமானம் மூலம் வந்தாலும் வீரசிங்கம் மண்டபத்துக்கு வரத்தானே வேண்டும். மைத்திரி வந்தபோதும், பிரிட்டன் பிரதமர் வந்தபோதும் தங்கள் கண்ணீருக்கு நியாயம் கேட்ட, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், உண்மையாகவே நியாயம் கேட்க வேண்டிய மகிந்தவுக்கும் தங்கள் போராட்டத்தின் வெம்மையை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் கதி என்னவென்பது மைத்திரிக்கோ, பிரிட்டன் பிரதமருக்கோ வேண்டுமானால் தெரியாதிருக்கலாம். ஆனால் மகிந்தவுக்கு மிக நன்றாகவே தெரியும். தங்கள் பிள்ளைகளின் கதி என்னவென்பதை அறியவேண்டுமானால் வாக்குப் பொறுக்க வரும் மகிந்தவின் சட்டையைப் பிடித்து உலுக்கினாலே தெரிந்துவிடும். தங்கள் நியாயக்குரலை மகிந்தவுக்கு எட்டச் செய்து, வந்தவேகத்திலேயே அந்த இனப்படுகொலையாளி தலை குனிந்து ஓடச் செய்யும் வல்லமை காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உண்டு. செய்வார்களா?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## விடுதலைக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம் நேற்று








கிளிநொச்சி,ஜன.21
தமிழ் தேசிய விடுதலை கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுகமும் முதலாவது தேர்தல் பிரசார கூட்டமும் கிளிநொச்சி பொதுச் சந்தையில் நேற்று மாலை இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ்பிரேமச்சந்திரன், வேட்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

## பெண் பொலிஸ் அதிகாரி தற்கொலைக்கு முயற்சி

கிளிநொச்சி,ஜன.21
தர்மபுரம் பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து நஞ்சருந்திய பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸ் நிலைய வட்டாரங்களை வினவிய பொழுது அவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றிருப்பதனை உறுதிப்படுத்தி உள்ளனர் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பெண் கான்ஸ்டபிள் ஒருவர், தன்னுடைய கணவனுடன் பகலில் காரசாரமாக உரையாடிய பின்னே, இவ்வாறு பொலிஸ்நிலையத்துக்குள் வந்து திடீரென நஞ்சு அருந்தியுள்ளார். தற்போது, அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதற்கு குடும்பத் தகராறே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)



## எமக்கு அதிகாரம் இல்லை
### கைவிரிக்கிறார் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர்



கொழும்பு, ஜன.21
உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர்கள், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர்களைத் தகுதியிழப்புச் செய்வதற்கு, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

"அரசபணியில் கள அதிகாரிகளாகப் பணியாற்றுபவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்று சட்டம் உள்ளது. அதனை மறைத்து, சட்ட விரோதமாக அத்தகைய கள அதிகாரிகள் அல்லது போட்டியிடத் தகுதியற்றவர்கள், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும், அவர்களைத் தகுதியிழப்புச் செய்யும் அதிகாரம் எமக்கு இல்லை.

வெற்றிபெற்ற வேட்பாளர்களை தகுதியிழப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் நீதிமன்றச் செயல்முறைகளின் மூலமே முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதனைச் செய்வதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இல்லை. பதவி வில்கி, அரசாங்க சேவையில் இல்லாத கள அதிகாரிகள், தேர்தலில் போட்டியிடுவதற்கு சட்ட ரீதியான தடைகள் இல்லை.

எனினும், உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றிய அதிகாரிகள், பதவி விலகிய பின்னரும் அவ்வாறு செய்ய முடியாது. அத்தகைய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க தயங்கமாட்டோம்.

எனினும், அத்தகைய வேட்பாளர்களின் நியமனப் பத்திரங்களை ரத்துச் செய்யும் அதிகாரம் எமக்கு இல்லை." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பெப். 7 வரையே அவகாசம்

கொழும்பு, ஜன.21
ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரிவு அல்ல எனவும் அது தனியான கட்சி எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். வத்தளை, ஹுனுப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனை கூறியுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்த சிலரே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருக்கின்றனர். அவர்களில் ஊழல், மோசடிகளுடன் தொடர்பில்லாதவர்கள் கட்சிக்கு மீண்டும் திரும்ப ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கதவு பெப்ரவரி 7 ஆம் திகதி வரை திறந்திருக்கும் எனவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## இனிமேல் நிதி என்னிடம்! மைத்திரியின் மாற்றம்

கொழும்பு, ஜன.21
நாட்டின் நிதி முகாமைத்துவத்தை தனக்கு கீழ் கொண்டுவர உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடங்களாக நாட்டின் நிதி முகாமைத்துவத்தை ஐக்கிய தேசிய கட்சிக்கு தான்வழங்கியதாக கூறிய ஜனாதிபதி, தனது தலைமையில் நிதி முகாமைத்துவ சபை ஒன்றினை அமைத்து நாட்டின்நிதி முகாமைத்துவத்தை தனக்கு கீழ் கொண்டுவர உள்ளதாக குறிப்பிட்டார். (அ)

## இன்று நாளும் கோளும்

21.01.2018 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 03 ஆம் நாள்
சதுர்த்தி பி.ப 01.37 | பூராட்டாதி 05.05 வரை | அமிர்தயோகம்
இராகுகாலம் 04.30 - 06.00 | சுபநேரம் மு.ப. 03.30 - 048.30 | எமகண்டம் பி.ப. 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பக்தி | தெளிவு | விருப்பம் | நட்பு, | பரிவு | விருத்தி | சிக்கல் | தோல்வி | தேர்ச்சி | அனுகூலம் | காரியசித்தி | பணவசதி |

# ஐ.தே.கவை கவிழ்க்குமா மைத்திரியின் நகர்வு?



தேர்தல் என்ற ஒன்று வந்தால் அதில் வெற்றி பெறுவதற்கு ஏதாவது ஒரு துருப்புச் சீட்டு இருக்க வேண்டும். அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட துருப்புச் சீட்டை விடவும் ஊழல், மோசடியுடன் தொடர்புபட்ட துருப்புச் சீட்டே மிகவும் இலகுவாகவும் ஆழமாகவும் மக்களின் மனங்களில் பதியும். அந்த வகையில், இப்போது தெரிவு செய்யப்பட்டிருக்கும் துருப்புச் சீட்டுத்தான் மத்திய வங்கி பிணை முறி மோசடி மீதான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை.

இந்த அறிக்கை சரியான நேரத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளது. இது ஐக்கிய தேசிய கட்சிக்கும் அதன் கூட்டணி கட்சிகளுக்கும் எதிராக இருக்கின்ற அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மஹிந்த தரப்புக்கும் இது ஒரு வரப்பிரசாதமாகும். அதிலும் சுதந்திரக் கட்சிக்குத்தான் இது பலமான துருப்புச்சீட்டாகும். இந்தத் துருப்புச் சீட்டுக்கு ஜனாதிபதி மைத்திரி சொந்தக்காரராக இருப்பதே இதற்கு காரணம்.

ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்திருக்கும் நிலையில், ஆட்சியின் பங்காளரான ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியைப் பாதிக்கக்கூடிய அறிக்கையை மைத்திரி ஏன் தேர்தல் நேரத்தில் வெளியிட்டார். ஏன் அதைக் கிடப்பில் போட்டு தேர்தல் முடிந்ததும் வெளியிடவில்லை என்ற கேள்விகள் எழுகின்றன.

இதைத்தான் பழிக்குப்பழி என்று சொல்வது. ஒரு கல்லில் இரு மாங்காயாக சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்த சூத்திரதாரியாக இருந்து செயற்பட்ட ரணிலை பழிவாங்கிய அதேவேளை, இந்தப் பிளவால் சரிவடைந்துள்ள சுதந்திரக் கட்சியின் வாக்கு வங்கியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்த திருப்தியும் மைத்திரிக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலோடு மைத்திரி–மஹிந்த அணிகள் என இரண்டு அணிகளாக சுதந்திரக் கட்சி பிளவுபட்டது. நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து மஹிந்தவுக்கு பிரதம பதவி வழங்கப்படாததால் இந்தப் பிளவு மேலும் விஸ்தீரமாகியது.

பிரதான கட்சி ஒன்று இவ்வாறு பிளவுபட்டால் நன்மையடையப் போவது மற்றுமொரு பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிதான். அதன் தலைவர் ரணில் இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். அந்த இரண்டு கட்சிகளும் இணையாதவாறு காயை நகர்த்திவிட்டார். சுதந்திரக் கட்சியின் பிளவுக்கு காரணம் ரணில்தான் என்று அந்தக் கட்சியின் குருநாகல் மாவட்ட எம்.பி. நலின் பண்டார ஒரு கூட்டத்தில் வைத்து வெளிப்படையாகவே கூறிவிட்டார்.

இவ்வாறு கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்தி தனக்கு ஆப்பு வைத்தவர் ரணில்தான் என்று மைத்திரி அறிந்தும்கூட அவர் இதுதொடர்பில் இதுவரை வாய் திறக்கவில்லை. பழிவாங்குவதற்கு வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார். அந்த வாய்ப்பு பிணை முறி விசாரணை அறிக்கையின் வடிவில் ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளது.

சுதந்திரக் கட்சி பிளவுபட்டுள்ள நிலையில் தேர்தல் ஒன்றைச் சந்தித்தால் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி பெறும் என்று மைத்திரிக்குத் தெரியும். அந்த நிலையில் இருந்து தப்புவதாக இருந்தால் தேர்தல் நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை கவிழ்க்கக்கூடிய ஒரு துருப்புச் சீட்டு தேவை என்பதை மைத்திரி உணர்ந்தார்.

அந்தத் துருப்புச் சீட்டாக மைத்திரி தெரிவு செய்தது பிணை முறி விசாரணை அறிக்கையைத்தான். உரிய தருணத்தில் அதை வெளிப்படுத்துவதற்குத் திட்டமிட்டார். அவ்வாறே செய்தார். அதுமட்டுமன்றி, ஐக்கிய தேசியக் கட்சியினர் திருடர்கள் என்று மக்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் சூசகமாக கூறவும் தொடங்கியுள்ளார்.

தேசிய அரசின் பங்காளியான சுதந்திரக் கட்சியின் மீது இதுவரை எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லாத நிலையில்,ஐக்கிய தேசிய கட்சிமீது இந்த மூன்று வருடங்களுக்குள் பிணை முறி மோசடி உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இரு கட்சிகளுக்குமிடையிலான வித்தியாசத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்தி மக்களின் சிந்தனையை மைத்திரி தரப்பு தூண்டி வருகின்றது.

இந்த சவாலை முறியடித்து தேர்தலை வெற்றிகொள்ள வேண்டிய கட்டாயத்துக்குள் ஐக்கிய தேசியக் கட்சி இப்போது தள்ளப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை வைத்துக்கொண்டு சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக பிரசாரம் செய்தாலும் செய்யாவிட்டாலும் பிணை முறி மோசடி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் குற்றவாளி என்று மக்கள் தாமாக உணரும் வகையில்தான் ஐ.தே.கவின் செயற்பாடுகள் உள்ளன.

இந்த மோசடி தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக பிரதான சூத்திரதாரிகளைக் காப்பாற்றும் வகையில் அக்கட்சி நடந்துகொள்கின்றமை யார் திருடர்கள் என்பதை மக்களுக்குத் தெளிவாக வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

அர்ஜுன மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநராக நியமிக்க வேண்டாம் என்று பலர் கூறியும் அதையெல்லாம் காதில் வாங்காது விடாப்பிடியாக நின்று அவரை நியமித்தார் பிரதமர். இதன் பின்தான் மகேந்திரனின் நேரடி பங்களிப்பில் பிணை முறி மோசடி இடம்பெற்றது. இதன் பிறகுகூட மகேந்திரனின் பதவிக் காலத்தை மேலும் நீடிப்பதற்கே பிரதமர் நடவடிக்கை எடுத்தார். ஜனாதிபதி மறுத்ததால் அது முடியாமல் போனது.

இருந்தும், பிரதமர் மகேந்திரனைத் தனது பொருளாதார ஆலோசகராக நியமித்துக் கொண்டார். அது மாத்திரமன்றி, இந்த விவகாரம் நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டபோது மகேந்திரனைப் பாதுகாக்கும் வகையிலேயே பிரதமர் உரையாற்றினார்.

இந்த நிலையில்தான் ரவி கருணாநாயக்கவும் இந்த மோசடியில் பங்குதாரர் என்பது தெரிய வந்தது. இந்தப் பிணை முறி வழங்கல் இடம்பெற்றதன் பின் வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டாம் என்று ரவி வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கினார். இது அர்ஜுன ஆலோசியஸிற்கு சாதகமாகவும் நாட்டின் வருமானத்துக்குப் பாதகம் ஏற்படுத்தும் செயலாகவும் அமைந்திருந்தது.

இந்த உதவியைச் செய்தமைக்காகவே ரவிக்கு ஆலோசியஸ் ஆடம்பர வீடொன்றை லஞ்சமாக வாடகைக்கு எடுத்துக் கொடுத்தார். இதனால் ரவிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லா பிரேரணையைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் செய்ததால் ரவி அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்தார்.

ரவி மாத்திரமன்றி இந்த மோசடியை விசாரணை செய்த கோப் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய அக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இந்த மோசடியை மூடி மறைப்பதற்கே முயற்சி செய்தனர். கோப் அறிக்கையில் அடிக்குறிப்பிட்டு அந்த அறிக்கையை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் செயற்பட்டனர்.

அது மாத்திரமன்றி, கோப் குழு விசாரணையின்போது இவர்கள் அர்ஜுன ஆலோசியஸுடன் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தனர் என்றும் அவருக்குத் தகவல்களை பரிமாறிக்கொண்டிருந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி பிணை முறி திருடர்களை காப்பாற்றுவதற்கு வெளிப்படையாகவே முயற்சி செய்வது தெளிவாகத் தெரிகின்றது. இந்த விடயத்தில் பிரதமரின் செயற்பாடுகள் நக்கலும் நையாண்டியும் நிறைந்தவையாகவே இருக்கின்றன. மக்கள் இதற்கு பாடம் புகட்டுவர் என்ற அச்சமே இல்லாமல் நடந்துகொள்கிறார்.

இப்படித்தான் மஹிந்தவும் இருந்தார். யுத்த வெற்றி என்ற மிகப் பெரும் வரலாற்றுப் பரிசை சிங்கள மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தும் கூட ஊழல் புரிந்தார் என்ற ஒரே காரணத்துக்காக மக்கள் அவரை தூக்கி வீசிவிட்டனர். மஹிந்தவுடன் ஒப்பிடும்போது ரணில் வரலாற்றில் நிலைத்து நிற்கக்கூடிய எந்தவொரு சேவையையும் செய்யவில்லை.

சிங்களவர்களின் மனங்களில் ஒரு ஹீரோவாக அமர்ந்திருந்த மஹிந்தவையே தூக்கி வீசிய சிங்கள மக்களுக்கு ரணிலைத் தூக்கி வீசுவது ஒன்றும் பெரிய காரியமல்ல.

இந்த மூன்று வருட ஆட்சிக்குள் மைத்திரி தரப்பு எந்தவொரு குற்றச்சாட்டில் சிக்கவில்லை. இதை துருப்புச் சீட்டாகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக களமிறங்கியுள்ளார். மைத்திரியின் நகர்வு ரணிலின் சாணக்கியத்தை தோற்கடிக்குமா என்று தேர்தல் முடிவுகளின்போது பார்ப்போம்.

காவியன்

# வேட்பாளரின் அலுவலகம் அதிகாலையில் தீவைப்பு

மட்டக்களப்பு, ஜன.21

மட்டக்களப்பு மாநகரசபை தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரின் அலுவலகத்தின் மீது, நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக, மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் சார்பில் 6ஆம் வட்டாரம் கறுவப்பங்கேணி-இருதயபுரத்தில் போட்டியிடும் வேட்பாளர் காந்தனின் அலுவலகம் மீதே, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது அலுவலகத்தின் முன்பக்கமாகவுள்ள பதாகை எரியூட்டப்பட்டுள்ளது.

வீதிகளில் எரிந்துகொண்டிருந்த மின்குமிழ்கள் அணைக்கப்பட்டே, தமது அலுவலகத்தில் இருந்த பதாகையினை எரியூட்டியுள்ளதாக, வேட்பாளர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தமது வெற்றியை பொறுத்துக் கொள்ளமுடியாதவர்கள் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் வேட்பாளர் காந்தன் தெரிவித்தார். (அ)

# கேப்பாபிலவுக்கு வந்த நேபாளத் தளபதி



முல்லைத்தீவு,ஜன,21

முல்லைத்தீவு கேப்பாபிலவு பாதுகாப்பு படை தலைமையகத்துக்கு நேபாள இராணுவ தளபதி ஜெனரல் ராஜேந்திர செகேட்றி நேற்று விஜயம் செய்து பார்வையிட்டார்.

உலங்கு வானூர்தி மூலம் வருகைதந்த நேப்பாள இராணுவ தளபதி ஜெனரல் ராஜேந்திர செகேட்றியை, முல்லைத்தீவு பாதுகாப்பு படைத்தளபதி மேஜர் ஜெனரல் துஷ்யந்த ராஜகுரு வரவேற்றார்.

இதன்போது இராணுவ தளபதிகளுக்கிடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறாப்பட்டதோடு, இராணுவக் கட்டமைப்புக்கள், செயற்பாடுகள் என்பன தொடர்பிலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. (அ)

# கூட்டமைப்பு அலுவலகம் சுழிபுரத்தில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.21

வலி.மேற்கு பிரதேச சபைத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலாம் மற்றும் ஐந்தாம் வட்டாரங்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அலுவலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்த அலுவலகத்தைத் திறந்து வைத்தார். (அ)

# சீமைக்கிழுவை மின்சாரம் இலங்கையுடன் சீனா ஒப்பந்தம்

கொழும்பு,ஜன.21

சீமைக்கிழுவை (கிளிரிசீடியா) மரத்தை எரிபொருளாகப் பயன்படுத்தி, பசுமை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றை இலங்கையுடன் இணைந்து சீனா மேற்கொள்ளவுள்ளது.

மொனராகல மாவட்டத்தில், 70 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் இந்த மின் திட்டம் அமைக்கப்படவுள்ளது. சீனாவின் 3 நிறுவனங்கள், இலங்கையுடன் இணைந்து இந்த மின் திட்டத்தை அமைக்கவுள்ளன. இதற்கான உடன்பாடு நேற்று முன்தினம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

சீமைக்கிழுவை எனப்படும் கிளிறிசிடியா மரத்தை எரித்து, பெறப்படும்எரிபொருளில் இருந்தே, மின்சாரம் தயாரிக்கப்படவுள்ளது. இதன் மூலம், நூற்றுக்கணக்கான விவசாயிகள் பயனடைவர். ஆண்டுக்கு 3.2 மில்லியன் டொலருக்கு சீமைக்கிழுவை மரங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம், வரும் செப்ரெம்பர் மாதம் மின்சார உற்பத்தி தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கருங்கல் மலையில் சிவனின் பாதச்சுவடு

## மஸ்கெலியாவில் கண்டுபிடிப்பு



கொழும்பு, ஜன.21

மஸ்கெலியா, காட்மோர் பிரதேசத்தில் உள்ள காட்டில் மிகப் பெரிய வலது கால் ஒன்றில் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டிரோன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சிவனொளிபாத மலைக் காட்டுக்கு அருகில் மவுசாகலை நீர்த்தேக்கத்துக்கு மேல் உள்ள காட்டில் இருக்கும் கருங்கல்லில் இந்தப் பாதத்தை கண்ட தோட்டத் தொழிலாளர்கள், அதனை மஞ்சள் இட்டு கழுவி பூஜை செய்துள்ளனர்.

அந்தப் பாதத்தினை அவர்கள் சிவனின் பாதம் எனவும் தெரிவித்து வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் குறித்த பாத அடையாளம் சம்பந்தமாக ஆய்வுகளை நடத்த ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டிரோன் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ)

# முதலமைச்சர் மீது விசாரணை


கொழும்பு, ஜன.21

பதுளை தமிழ் மகளிர் பாடசாலை ஒன்றின் பெண் அதிபரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக ஊவா மாகாண முதலமைச்சருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்டுள்ளதாகவும்,விரிவான விசாரணைகளை நடத்தி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க உள்ளதாகவும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கூறியுள்ளது.

ஊவா மாகாண முதலமைச்சரின் கடிதம் ஒன்றுக்கு அமைய மாணவி ஒருவரை பாடசாலையில் சேர்த்து கொள்ளவில்லை என்ற காரணத்தினால் முதலமைச்சர், அதிபரை அச்சுறுத்தியுள்ளார். கடந்த 2 ஆம் திகதி ஊவா மாகாண முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் முதலமைச்சரின் அச்சுறுத்தல் காரணமாக அவரிடம் மண்டியிட்டு மன்னிப்பு கோரியதாக பாடசாலை அதிபர் நேற்று கூறியிருந்தார்.

இதேவேளை முதலமைச்சர் தன்னை அச்சுறுத்தவில்லை என பாடசாலை அதிபர் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார். தனக்கு முதலமைச்சரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாகவே தான் அப்படிப் பொய் கூறியதாக நேற்று அதிபர் குறிப்பிட்டிருந்தார். (அ)



# சனம் எல்லாரும் லூஸ் மாதிரித்தான் திரியினம். எலக்சனாலை.

இப்ப கொஞ்ச நாளா ஒரே ஆட்ட சீனாத்தான் கிடக்கு. இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் ரணில் ஆடின ஆட்டத்தைப் போட்டினம். நேற்றைக்கு சந்திரிகா ஆடினதைப் போட்டிருக்கினம். இனிமேல் ஆற்றை ஆட்டத்தைப் போடப்போகினமோ தெரியாது. சிலவேளை சம்பந்தன், மைத்திரி எண்டு பட்டியல் நீளுமோ?

நாங்கள் இப்ப பேப்பரிலை பாக்கிறதை விட முதலீன்ரை கான்போனிலைதான் கனவிசியத்தைப் பாக்கிறனாங்கள். முதலி கான்போனிலை இப்ப பத்தும் பலதையும் பாக்கப் பழகிவிட்டான். என்னெண்டெடா பழகின்னி எண்டு கேட்டதுக்கு வெளி நாட்டிலை கான்போனை இயக்கக் குரங்குக்குப் பழகிப்போட்டாங்கள். நாங்கள் மனுசர் பழகிறதுக்கு என்ன? எண்டு கேட்டான். அவன் சொன்னது உண்மைதான்.

இண்டைக்கு கம்பன் ஜெயராஜின்ரை ஒரு கட்டுரையை வாசிச்சுக் காட்டினான். வயிறு குலுங்கச் சிரிச்சன். அந்தாள் சும்மா சொல்லக்குடாது. கற்பனை எண்டாலும் சொன்ன விசியம் சனத்தைக் கொஞ்சம் சிந்திக்கவும் வைக்கும். அந்தாளின்ரை பேச்சும் அப்பிடித்தான். அவற்றை திருக்குறள் பற்றின பேச்சைக் கேட்டால். அவ்வளவும் விசேஷம்.

இப்ப நாங்கள் அரசியலைக் கதைக்கிறதை விட்டிட்டம். அவ்வளவு அருவெறுப்பாக் கிடக்கு. என்னத்தை எடுத்தாலும் உதைப் பற்றிக் கதைக்கிறதுதான் வேலையாக் கிடக்கு. சனத்துக்கும் ஆரை நம்பிறது. ஆரை நம்பப்பிடாது எண்டு தெரியேல்லை. முதலீட்டைக் கேட்டன். ஆருக்கெடா போடுவாயெண்டு. "அண்ணை, எல்லாம் பாரதிராஜா தன்ரை படத்திலை அறிமுகப்படுத்திற மாதிரிப் புது முகங்களாக் கிடக்கு. புது முகங்கள் எப்பிடி நடிக்கப்போகினம் எண்டு தெரியேல்லை. அவை மேடைக்கு வந்தால்தானே தெரியும் அவையின்ரை திறமையை. நான் இப்பிடித்தான் செய்யப் போறன். முதலிலை, தேர்த்தலிலை நிக்கிறவை சமூகப் பொறுப்புள்ளவையோ, அக்கறையுள்ளவையோ எண்டதைப் பாப்பன். சனத்துக்கு உதவி செய்யிற ஆர்வம் ஆரிட்டை இருக்கெண்டு பாத்து அவைக்குத்தான் என்ரை வோட்டைப் போடப்போறன். அது எந்தக் கட்சி எண்டாலும் பறவாயில்லை. வாறது வரட்டும். உதென்ன பார்லிமெண்ட் எலக்சனே? ஓடிப்போய் தமிழீழத்தைப் பிடிக்கப் போகினமே? ஊருக்குச் சேவை செய்யத்தானே ஊராட்சியள்? அப்ப ஊருக்கு ஆர் சேவை செய்வினமெண்டு பாத்துப் போடுவம் எண்டு இருக்கிறன். உதைத்தான் எல்லாரிட்டையும் சொல்லுறன். எங்கடை ஊரிலை வடக்கு றோட்டுத் தாரைக் கண்டு வருசக் கணக்காப் போச்சு. மழை காலத்திலை நீந்தி விளையாடலாம். வாசிகசாலையும் அரைவாசி நாளிலை பூட்டித்தான் கிடக்கு. பொதுக் கிணத்தடியின்ரை கயிறு அறுந்தால் அதுக்குப் புதுக் கயிறு வாங்கிறது நீயோ? நானோ? எண்டு கூடி முடிவெடுக்க ஒரு வருசம் ஆகும். அதுக்குப் பிறகு அதை ஆர் கட்டிறது எண்ட பிரச்சினை. கட்டிறது விழா வைச்சுக் கட்டிறதோ? சும்மா கட்டிறதோ? எண்டது அடுத்த பிரச்சினை. கயிறு கட்ட விழா எடுக்க வேணுமோ? அதுக்கு ஆரைத் தலைவராப் போடுறது எண்டதும் பிரச்சினையாகி கயிறு கட்டிற அண்டு பாத்தால் முஞ்சூறு மணந்து கயிறு இத்துப் போய்க் கிடக்கும். உப்பிடித்தான் நிர்வாகம் சீர் கெட்டுக் கிடக்கேக்கை திறமையுள்ள ஆக்களைப் பாத்துப்போட்டால்தான் ஊர் சிறக்கும். என்னத்தை சொன்னாலும் பிசகாக் கிடக்கு. சில நேரம் கதைக்கிறதைப் பாத்தால் முதலி திட்டிறான் லூஸ் மாதிரி அலம்பிறாய் எண்டு. நான் மட்டுமில்லை இப்ப சனம் எல்லாரும் லூஸ் மாதிரித்தான் திரியினம். எலக்சனாலை.

- வில்லங்கம் விநாசி

# சகல கட்சி பெண் வேட்பாளர்கள் இணைந்து தேர்தல் விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், ஜன. 21

நடக்கவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கில் போட்டியிடும் பெண்களுக்கு முழு ஆதரவு வழங்கி அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என சகல கட்சிகளினதும் பெண் வேட்பாரளர்கள் சார்பில் அவர்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர். அத்துடன், சகல கட்சிகளுக்கும் பொருந்தக்கூடிய தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றையும் அவர்கள் வெளியிட்டனர்.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

பெண்களின் முக்கியத்துவம் மற்றும் பங்களிப்புக்கள் குறித்தான தமது தேர்தல் விஞ்ஞாபனத்தையும் வெளியிட்டு வைத்து நீதிக்காகப் போராடும் பெண்களை உள்வாங்கிய கட்சிகளுக்கு மக்கள் வாக்குகளை வழங்கி அவர்களின் கட்சியை உறுதிப்படுத்தவேண்டும்.

கடந்த முப்பதாண்டு கால யுத்தத்தின் கொடூரத்திலிருந்து மீண்டு சற்று மூச்சு விடும் தருணத்தில்தான் எமக்கு புரிகின்றது சத்தங்கள் ஓய்ந்தாலும் எமது சமூக, பொருளாதார, கல்வி மற்றும் பண்பாட்டுத் தளங்களின், பாதுகாப்பு கேள்விக்குரியதென்று. ஆம் எதிர்காலத்தை எவ்வாறு சமாளிக்கப் போகின்றோமென்ற தவிப்பு.

இதை மீளக் கட்டியெழுப்புவது எப்படியென்ற சிந்தனைக்கு முன்பாகவே எமது பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை. எமக்கென தனித்துவமானதொரு அரசியற் தளத்தைப் போட வேண்டுமெனில், கடந்தகால அரசியலுக்கு மாறுபட்ட விதத்தில் மக்களின் சமூக, பொருளாதார, கல்வி மற்றும் பண்பாட்டில்மேம்பாட்டினைக் கொணர்வதன் ஊடாகவே இதனை அடைய முடியும்.

அதனால்தான் பெண்களாகிய நாம் பொறுத்தது போதுமென்ற நிலையில் நீதியையும், நியாயத்தையும் எமது பிரதேசத்தில் நிலைநாட்ட இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட கட்சிகள் மூலமாகவும், சுயேச்சைக் குழுக்கள் மூலமாகவும் களமிறங்கியிருக்கின்றோம்.

உண்மையும், நேர்மையும் கொண்ட எமது அரசியலில் தனி மனித சிபாரிசுகளோ, பொய்யான வாக்குறுதிகளோ அல்லது சலுகை காட்டி வாக்குப் பெறுவதாகவோ இருக்காது. பல வருடங்களாக சமூகத்திற்குப் பணியாற்றிய எமக்கு மக்களின் ஆதரவு இந்த வட்டார முறைத் தேர்தலில் வெற்றியைப் பெற்றுத் தரும்.

எம்மால் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு அபிவிருத்தி நடவடிக்கைகளிலும், ஊழல் நடவடிக்கைகளுக்குத் துணைபோகாத, பக்கச்சார்பற்ற, வெளிப்படைத் தன்மை பேணப்படும். வன்முறையினால் வளர்ந்த அரசியலை மாற்றி வன்முறையற்ற, சகலருக்கும் நன்மை பயக்கும் அரசியற் பண்பாட்டை மீளவும் எமது சமூகத்தில் எமக்காக, எம் தாய்மாருக்காக, எம் சகோதர, சகோதரிகளுக்காக உருவாக்குவோம் - என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ச)

## மனித முகத்துடன் அதிசய நாகபாம்பு



மட்டக்களப்பு, ஜன.21

மனித முகம் போன்ற உருவம் பொறிக்கப்பட்ட அதிசய நாக பாம்பு ஒன்று தோப்பூர் நீணாக்கேனிப் பிரதேசத்தில் ஊர் மக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனினும் அச்சம் காரணமாக அதனை அவர்கள் அடித்துக் கொன்றுள்ளனர். இந்தப் பாம்பு விசித்திரம் நிறைந்து காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.மிகவும் நீளமான இந்த நாகப்பாம்பின் வால் பகுதி மனித முகத்தை கொண்டுள்ளமை பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.இவ்வாறான பாம்பு இனம் இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளர். (அ)

# தொடர்ச்சிகள்

### தடை நீக்க. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கலாம் என்றும் பிரதமர் கூறினார்.

திருடர்களைக் கைது செய்து அவர்களுக்கு எப்பொழுது அரசாங்கம் தண்டனை வழங்கும் என்று பலர் முன்வைக்கும் கேள்விகளுக்கும் பதிலளிக்கும் விதமாக பிரதமர் ஆற்றிய உரையில் வழக்குகள் தாமதமடைவதைத் தடுக்கப் புதிய சட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சட்டமா அதிபருக்கு மேல் நீதிமன்றத்தில் நேரடியாக வழக்குத் தாக்கல் செய்ய முடியும். இதனை மூன்று நீதிபதிகள் விசாரிக்க இருக்கின்றார்கள். ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு விரைவாக தண்டனை வழங்கும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கும் - என்றார். (ச)

### அரசின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபையில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்களை ஆதரித்து நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளி கட்சியாக உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை விட, மூன்று மடங்கு அதிகமாக உள்ள மகிந்த அணிக்கு, எதிர்கட்சி தலைவர் பதவியைக் கொடுக்காமல் சம்பந்தனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமது பங்காளி கட்சியை எதிர்க்கட்சி தலைவராக வைத்திருந்தால் நாங்கள் செய்யும் அரசியல் மோசடியை மூடி மறைப்பதற்கு, அது உதவும் என்ற காரணத்திற்காக, எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து ஒரு அரசியலமைப்பை உருவாக்கியுள்ளனர். இந்த அரசியலமைப்பை பார்த்தால் இது முற்றுமுழுதாக ஒற்றையாட்சிக்குரிய அரசியலமைப்பாக உள்ளது. சாதாரண மக்களுக்கு இதன் நுணுக்கங்கள் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்காது.

ஒற்றையாட்சி முறையானது சிங்கள மக்களினுடைய கையில் தான் அந்த ஆட்சி இருக்கும். ஒரு நாட்டில் 75 வீதத்திற்கு மேலாக சிங்கள மக்களின் சனத்தொகை இருக்கின்ற நிலையில் ஆட்சி அதிகாரம் ஒரு மையத்தில் இருக்குமாக இருந்தால், 75 வீதமான மக்களின் விருப்பத்தின் படிதான் அதிகாரம் பயன்படுத்தப்படும். ஒற்றையாட்சி முறையை சிங்கள மக்களின் கையில் கொடுத்திருக்கின்ற படியால் தான், தென் தமிழ் தேச மண் பறி போயுள்ளது. ஒட்டுமொத்த இலங்கைத் தீவும், பௌத்த நாடு. வட கிழக்கில் தமிழ் மக்கள் வாழ்வது, பௌத்த நாட்டின் கனவுக்கு சவாலாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் வட, கிழக்கு தாயகம் இல்லாமல் செய்யப்பட வேண்டும். தமிழ் மக்கள் வடகிழக்கில் வாழ்வது தங்களுக்கு சர்வதேச சட்டத்தின்படி ஆட்சி உரிமை இருக்கின்ற படியால் வாழ்ந்து வருகின்றனர். ஒரு காலகட்டத்தில் சர்வதேசம் தமிழ் மக்களுக்கு வழங்கிய சட்டத்தின்படியானஆட்சிஉரிமையைஅங்கீகரிக்கக்கூடும். அங்கீகரித்தால் சிங்கள ஒட்டுமொத்த இலங்கைத் தீவும் என்ற கனவு இல்லாமல் போகும். பிரித்தானியர் நாட்டை விட்டு வெளியேறியதில் இருந்து ஒற்றையாட்சி அரசியலமைப்பை உருவாக்கி சிங்கள தலைவர்கள் ஆட்சி செய்து எங்களது தாயக நிலப்பரப்பை பறித்துக் கொண்டிருக்கின்றார்கள் - என்றார். (ச)

### ரயிலை மறித்து... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்தோம். எனினும் எவரும் செவி சாய்க்கவில்லை. சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய மாற்று வீதியொன்றில் போக்குவரத்து செய்யுமாறு தெரிவிக்கின்றனர். அவ் வீதிகூட செப்பனிடப்படாத வீதி. இதனால் மாணவர்கள், கர்ப்பவதி தாய்மார் உட்பட பலரும் அசௌகரியங்களை கடந்த 7 வருடங்களாக எதிர்கொண்டு வருகின்றோம். எவ்வித தீர்வும் கிடைக்காத நிலையிலேயே நாம் இப்போராட்டத்தில் ஈடுபடுகின்றோம்" என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

100இற்கு மேற்பட்டோர், தண்டவாளத்தில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையினால் கொழும்பில் இருந்து யாழ் நோக்கி சென்ற கடுகதி புகையிரதம் ஓமந்தை புகையிரத நிலையத்தில் சுமார் 2 மணி நேரமாக தரித்து நிற்கவேண்டிய இருந்ததால், அதில் பயணித்த பொது மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

இந் நிலையில் சம்பவ இடத்துக்கு வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் என்போர் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சில் ஈடுபட்டனர். ரயில் நிலைய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி, ஒரு வாரத்துக்குள் தீர்வைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார். அதன் பின்னரே போராட்டம் கைவிடப்பட்டது. (அ)

### கைவிடப்பட்டதா?... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவில் நடக்கும் நாடு கடந்த தமிழீழ அரசின் அரசவை அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முடிந்தால் இலங்கை அரசாங்கத்துடன் பேசி 6 ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு மக்கள் முன்னால் வந்து சுமந்திரன் ஆணை கேட்கட்டும். நாம் தமிழீழத் தனியரசுக்கு ஆதரவாக நிற்கிறோம். நீங்கள் எதிராக நில்லுங்கள் மக்கள் தீர்ப்பு வழங்கட்டும். மக்கள் உங்களுக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கினால் அதன் பின்னர் பேசுங்கள் மக்கள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டனர் என்று- என்றார்.

மேலும், அவர் தனது உரையில் சமகால இலங்கைத் தமிழரின் அரசியல் செல்நெறி, சமகால அரசியல் நிலைப்பாடு, காலநிலை குறித்தும் பேசினார். (ச)

### ஐ.தே.க... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஶ்ரீங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"நல்லாட்சியை நிலைநிறுத்துவதற்கு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெற வேண்டிய தேவை உள்ளது. வடக்கு-கிழக்கை மீண்டும் இணைத்து தமிழ்-முஸ்லிம் மக்களை மோதவிடும் சதித் திட்டத்தை முறியடிப்பதென்றால் ஐக்கிய தேசிய கட்சியை கிழக்கு மாகாணத்தில் இருந்து முற்றாக விரட்டியடிக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கு விழும் ஒவ்வொரு வாக்கும் வடக்கு-கிழக்கை இணைப்பதற்கான மக்கள் ஆணையாகும்.கிழக்கில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்றால் அதுவும் முஸ்லிம் பகுதிகளில் வெற்றிபெற்றால் வடக்கு-கிழக்கை இணைப்பதற்கான முஸ்லிம் மக்களின் சம்மதமாக அந்த வெற்றியை பிரதமர் எடுத்துக்கொள்வார்.

நாங்கள் இனி நாடாளுமன்றில் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தால் இந்த வெற்றியை எம்மிடம் காட்டி முஸ்லிம்கள் வடக்கு-கிழக்கு இணைப்புக்குச் சம்மதம் தெரிவித்துவிட்டார்கள் என்று கூறுவார். எம்மால் எதிர்க்க முடியாத நிலையை உருவாக்குவார்.

இணைப்புக்கு ரவூப் ஹக்கீம் முழுமையாக ஆதரவு வழங்குகிறார். ஹக்கீமுக்கும் சம்பந்தனுக்கும் இடையில் நெருக்கமான உறவு உள்ளது. அந்த உறவு வடக்கு-கிழக்கு இணைப்பில்தான் போய் முடியும். இதற்கு நாம் ஒருபோதும் இடங்கொடுக்கமாட்டோம்.

வடக்கு-கிழக்கு இணைந்திருந்தபோது முஸ்லிம்கள் அதிக பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர்.அதுபோன்ற பல பிரச்சினைகளுக்கு நாம் மீண்டும் முகம் கொடுக்க வேண்டி வரும்.ஆகவே,வடக்கு - கிழக்கு இப்போது உள்ளதுபோல் பிரிந்தே இருக்க வேண்டும்.இதற்காக நாம் ஐக்கிய தேசியக் கட்சியை கிழக்கில் இருந்து விரட்டியடிக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார்.(அ)

### அம்பாந்தோட்டையில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளது.

இப்படி இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார் ஜப்பானின் கூட்டுப் படைத் தளபதி அட்மிரல் கட்சுரோஷி கவானோ.

இந்து சமுத்திரத்தில் சீனா தனது கடற்படைப் பலத்தைப் பெருக்கி வருகிறது. டிஜிபோட்டில் முதல் கடற்படைத் தளத்தை கடந்த ஒகஸ்ட் மாதம் திறந்த சீனா, அம்பாந்தோட்டை துறைமுகத்தை டிசம்பரில் குத்தகைக்குப் பெற்றது. டிஜிபோட்டி சீன கடற்படைத் தளம் இந்தியப் பெருங்கடலில், அந்த நாட்டின் கடல் நடவடிக்கைகளுக்கு வெளிப்படையாகவே உதவியாக இருக்கும்.

அம்பாந்தோட்டை துறைமுகம் ஒரு வர்த்தக கட்டுமானமே என்று இலங்கையும் சீனாவும் கூறுகின்றன. ஆனால், சீனா தனது கடல் கடந்த இரண்டாவது தளத்தை தெற்காசியாவில் அம்பாந்தோட்டையில் கட்டியெழுப்பினால், சீன கடற்படையின் ஆற்றல்கள் புதிய மட்டங்களுக்கு அதிகரிக்கக் கூடும்.

இத்தகைய விநியோக வசதிகளை பயன்படுத்தினால், சீனக் கடற்படைக் கப்பல்கள் தமது நாட்டுக்குத் திரும்பாமல் நீண்ட காலத்துக்கு இந்தியப் பெருங்கடலில் தங்கியிருக்க முடியும். சீனா தனது அணுசக்தி நீர்மூழ்கிகள் மற்றும் கடற்படைக் கப்பல்களை அண்மைய ஆண்டுகளாக இந்தியப் பெருங்கடலில் தொடர்ச்சியாக நிறுத்தி வருகிறது.

எமது முக்கியமான கப்பல் பாதைகள் இந்திய பெருங்கடல் மற்றும் தென் சீனக்கடல் வழியாகவே இருக்கின்றன. இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் கடற்படை விரிவாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில், அமெரிக்கா, அவுஸ்ரேலியா, இந்தியா ஆகிய நாடுகளுடன் ஜப்பான் இணைந்து பணியாற்றும். தற்போதுள்ளது போன்ற சீனாவின் இராணுவ செலவின விரிவாக்கம், தொடர்ந்தால், ஜப்பான் தீவிரமான பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்ளும். அந்தச் சூழலைக் கணிக்க முடியாது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### சிவராம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயதப் போராட்டத்தின் நியாயத் தன்மையையும் அரசியல் செயற்பாட்டையும் சர்வதேச - இராஜதந்திர ரீதியாகவும் கொண்டு செல்வதற்கு பலமான அரசியல் தளம் வேண்டும் என ஊடகவியலாளர் தராக்கி சிவராமே முன்னின்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கக் காரணமாக இருந்தார்.

இந்த சிவராமை கொன்றவர்கள் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலேயே உள்ளார்கள். சிராமை கொன்றுவிட்டு கூட்டமைப்புக்குள் இருப்பவர்கள் என்ன சொல்கின்றார்கள். இடைக்கால அறிக்கையை நாம் குழப்பியதாக இருக்கக் கூடாது. அரசாங்கம் தேவைப்பட்டால் குழப்பட்டும் என்கிறார்கள். ஆனால் அரசு இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலம் இடைக்கால அறிக்கைக்கான ஆதரவை பார்க்கின்றனர்.

கடந்த ஒரு மாதமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் அரசிடம் 2 கோடி ரூபாவை வாங்கியதாக நான் தெரிவித்து வருகின்றேன். ஆனால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராவது அதை மறுக்கவில்லை. நான் சவால் விடுகின்றேன். முடிந்தால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராவது இதை மறுக்கட்டும். அடைக்கலநாதனுக்கு வழங்கப்பட்ட பதவி "ஆம்" கட்சிக்கு வழங்கப்படுகின்ற பதவி. ஆனால் அவர் இன்று கூறுகின்றார் தாங்கள் அரசாங்க கட்சியை சேர்ந்தவர்கள் இல்லை என்று அவ்வாறெனில் நீங்கள் இந்த பதவியை ராஜினாமா செய்துவிட்டு வாருங்கள் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# உயிர் காத்த ட்ரோன்



நியூ சவுத் வேல்ஸ், ஜன.21

அவுஸ்ரேலியாவில் கடலில் சிக்கிய இளைஞர்களை, உலகில் முதல் முறையாக ஆளில்லா விமானம் காப்பாற்றியுள்ளது.

அவுஸ்ரேலியாவில் கடலில் விழுந்தவர்களைக் காப்பாற்றுவதற்காக ட்ரோன் எனப்படும் ஆளில்லா விமானங்களை பாதுகாப்பு பணிக்காக ஈடுபடுத்தியுள்ளனர். இந்த நிலையில் நேற்று முன் தினம் நியூ சவுத் வேல்ஸ் கடற்கரையில் நீச்சல் அடித்துக் கொண்டிருந்த போது இரண்டு இளைஞர்களை அலை இழுத்துச் சென்றது.

அவர்கள் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தனர். இதனைக் கண்ட பாதுகாப்பு வீரர் ட்ரோனை அந்த இடத்துக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் இருக்கும் இடத்தை சரியாக கண்டுபிடித்த ட்ரோன் உயிர்காக்கும் பலூனை கீழே போட்டது. அதனைப் பிடித்து கொண்டு இருவரும் கரை வந்து சேர்ந்தனர். உலகில் முதல் முறையாக கடலில் சிக்கியவர்களை ட்ரோன் காப்பாற்றியமை அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த ட்ரோன்கள் கடலில் சுறா, திமிங்கலம் போன்ற பெரிய மீன்கள் வருவதையும் கண்டுபிடித்து எச்சரிக்கை செய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. (அ)

# களிமண்ணை உண்ணும் மனிதன்



ஜார்க்கண்ட், ஜன.21

இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநிலத்தில் 99 வயது முதியவர் நாள்தோறும் ஒரு கிலோ களிமண்ணை சாப்பிட்டு உயிர் வாழ்ந்துவரும் தகவல் பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலம், சாஹேப் கானி மாவட்டத்தைச் சேர்ந்தவர் காரு (வயது - 99). இவர் தனது 11 வயதில் இருந்து களிமண் சாப்பிடும் பழக்கத்துக்கு அடிமையானார். சிறுவயதில் இருந்து தற்போது வரை காரு ஒருநாள் கூட களிமண் உண்ணாமல் இருந்ததில்லையாம்.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை' என்பதைப் போல், சிறுவயதில் உண்டான பழக்கம் இப்போது காருவை தொற்றிக்கொண்டு களிமண் சாப்பிடுவதை விடமுடியாமல் தவித்து வருகிறார்.

"எனது நிதி நிலைமை நினைத்து எனக்கு வெறுப்பாக இருந்தது. என்னுடைய 10 குழந்தைகளுக்கு உணவு அளிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தேன். தற்கொலை செய்யவும் முயற்சி செய்தேன். அதன் பின் களிமண்ணை சாப்பிடத் தொடங்கினேன். அந்தப் பழக்கம் தொடர்ந்து களி மண் சாப்பிடுவதற்கு அடிமையாகிவிட்டேன். இப்போது அந்த பழக்கத்தில் இருந்து என்னால் விடுபடமுடியவில்லை." எனத் தெரிவித்தார்.


அதிர்ஷ்டவசமாக இதுவரை இவரின் உடலுக்கு எந்தவிதமான பாதிப்பும் வந்ததில்லை.

ஆரோக்கியத்துடன், நல்ல உடல்நிலையுடன் இருக்கிறார்.

களிமண் சாப்பிட்டு உயிர்வாழும் காருவுக்கு கடந்த 2015 ஆம் ஆண்டு பீகார் மாநிலத்தின் 'சபோர் கிரிஷி வித்யாலயா' என்ற விருது வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மெக்ஸிக்கோ எல்லையில் தடுப்புச் சுவர் தேவைதான்

## ட்ரம்ப் விடாப்பிடி



வோஷிங்டன், ஜன.21


பாதுகாப்புக் காரணங்களுக்காக மெக்ஸிக்கோ எல்லையில் சுவர் தேவை என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ட்ரம்ப் தனது ருவிட்டர் பக்கத்தில், "நமது பாதுகாப்பு காரணங்களுக்காக மெக்ஸிக்கோ எல்லையில் சுவர் நிச்சயம் தேவை. மெக்ஸிக்கோவில் இருந்து பெருமளவிலான போதை மருந்துகள் இங்கு வருவதை தடுக்க இது உதவும். தற்போது மெக்ஸிக்கோதான் உலகின் ஆபத்தான நாடாக உள்ளது. சுவர் இல்லை என்றால், எந்த ஒப்பந்தமும் கிடையாது" என்று பதிவிட்டுள்ளார்.

மெக்ஸிக்கோவில் இருந்து ஆண்டுதோறும் லட்சக்கணக்கானோர் சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறுகின்றனர். இதைத் தடுக்க சுமார் 670 மைல் தொலைவுக்கு பல்வேறு வகைகளில் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற டொனால்டு ட்ரம்ப், இரு நாட்டு எல்லையில் ஏறிக் கடக்க முடியாத, நுழைய முடியாத உயரமான, பெரிய, அழகான எல்லைத் தடுப்புச் சுவர் எழுப்பப்படும் என்று அறிவித்தார்.

இதற்கான ஒப்பந்தங்களில் கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ட்ரம்ப் கையெழுத்திட்டார். (அ)



# நீதிபதியாகும் ஒபாமா

வோஷிங்டன், ஜன.21

அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதியாக இருந்த ஒபாமா தனது பதவி காலத்தில் ஒவ்வொரு நிமிடத்தையும் உலகம் சார்ந்த மிகப்பெரிய திட்டமிடலுக்கும் அதை செயற்படுத்தவும் முனைப்புகாட்டி பரபரப்புடன் இருந்தார். ஆனால் பதவிக்கு பின் தினந்தோறும் எப்படி நேரத்தை மகிழ்ச்சியாக செலவழிப்பது என திட்டமிட்டு வருகிறார்.

ஓய்வுக்கு பின்னர் தொழிலதிபரான ரிசர்ட் ப்ரான்சனுடன் கடற்கரையில் பட்டம் விட்டு நேரம் செலவிட்டும் வெளிநாட்டு உயர் அதிகாரிகள் சிலருடன் சந்திப்பு நடத்தினார். எக்காரணம் கொண்டும் ஒபாமாவை கார் ஓட்ட அவருடன் இன்றும் இருக்கும் சில பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதிப்பது இல்லை.

பெரும்பாலும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகள் தொழில் ரீதியாக செயல்பட முனைவதில்லை.

ஆனால் ஒபாமா வேறு திட்டம் வைத்திருப்பதாக தெரிகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் ஒபாமா வழக்கறிஞர் தொழில் புரிந்திருந்தார். எனவே அவர் அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதியாக வாய்ப்பு உள்ளது. தனது பிள்ளைகளின் கற்கைக் காலம் முடிந்ததும் ஒபாமா நீதிபதியாகக் கூடுமெனத் தெரியவருகின்றது. (அ)



# வினோத்துடன் இணையும் விஜய்

சென்னை, ஜன.21

'சதுரங்க வேட்டை', 'தீரன் அதிகாரம் ஒன்று' படங்களின் இயக்குநர் வினோத்தை அழைத்துப் பேசியுள்ளார் நடிகர் விஜய். இதனால் இவர்கள் கூட்டணியில் புதிய படம் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வினோத் இயக்கத்தில் கார்த்தி, ரகுல் ப்ரீத் சிங் நடிப்பில் உருவான படம் 'தீரன் அதிகாரம் ஒன்று'. பொலிஸ் அதிகாரியின் கதையை உண்மையும் அழுத்தமுமாகச் சொன்ன 'தீரன் அதிகாரம் ஒன்று' படத்தை அனைவரும் பாராட்டினர்.

இந்நிலையில், 'தீரன் அதிகாரம் ஒன்று' படத்தை சமீபத்தில் பார்த்த விஜய், இயக்குநர் வினோத்தை அழைத்துப் பேசியிருக்கிறார். வினோத்திடம் படம் குறித்தும், அதன் திரைக்கதை குறித்தும் சிலாகித்துப் பேசிய விஜய், 'நாம் இணைந்து ஒரு படம் பண்ணலாம், நல்ல கதை இருந்தால் சொல்லுங்கள்' என்று கூறியிருக்கிறார். இதனால் விஜய்க்கான கதையை உருவாக்குவதில் வினோத் கவனம் செலுத்தி வருகிறார். (அ)



# சூர்யா ரசிகர்கள் கொதிப்பு

சென்னை, ஜன.21

பிரபல தொலைக்காட்சியில் இரண்டு தொகுப்பாளினிகள் சூர்யாவின் உயரத்தை கிண்டல் செய்து பேசியிருந்தனர். அதற்கு பிரபலங்கள் முதல் ரசிகர்கள் வரை அனைவரும் தங்களது எதிர்ப்புக் கருத்தை வெளிப்படுத்தி இருந்தனர்.

இந்தப் பிரச்சினையால்கடும் கோபத்தில் இருந்த சூர்யா ரசிகர்கள் நேற்றுக் காலை சூர்யா பற்றி விமர்சித்த தொலைக்காட்சி முன் "மன்னிப்பு கேட்க வேண்டும்" என்று போராட்டம் நடத்தியுள்ளனர். இதற்கு நடுவில் நடிகர் சூர்யா தன்னுடைய சமூக வலைத்தளத்தில், 'தரம் தாழ்ந்த விமர்சனங்களுக்கு எதிர்வினையாற்றி நம் தரத்தை நாம் குறைத்து கொள்ள வேண்டாம். உங்களின் நேரத்தையும், சக்தியையும் பயனுள்ள செயல்களுக்கு செலவிடுங்கள், சமூகம் பயன் பெற' என்று பதிவு செய்துள்ளார். (அ)

# குறைகிறது பிறப்புவீதம்

பீஜிங், ஜன.21

குடும்பத்துக்கு இரண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள சீன அரசு அனுமதித்தும் [illegible] நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்துவருவதாக [illegible] புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சீனாவின் தேசிய புள்ளியியல் துறை தகவல் வெளியிடுகையில், "சீனாவில் பிறப்பு விகிதம் கடந்த ஆண்டு ஒரு கோடியே 72 லட்சமாக உள்ளது. இது 2016 ஆம் ஆண்டை விட 18 லட்சம் குறைவு (2016 இல் சீனாவில் பிறப்பு விகிதம் 1 கோடியே 90 லட்சம்)" என்று கூறப்பட்டுள்ளது.

சீனாவில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த 1970-களில் ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை என்ற சட்டத்தை அந்த நாட்டு அரசு கொண்டுவந்தது. இதன்படி கடந்த 42 ஆண்டுகளில் 40 கோடி பிறப்புகள் தடுக்கப்பட்டுள்ளன.

பின்னர் குடும்பத்துக்கு இரண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள சீன அரசு அனுமதித்தும் அந்த நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்து செல்வதாகக் கூறப்படுகின்றது. (அ)



# பார்வையற்றோர் கிரிக்கெட்: உலகக்கிண்ணம் இந்தியாவுக்கு!

ஷார்ஜா,ஜன.21

ஷார்ஜாவில் நடந்த பார்வையற்றவர்களுக்கான கிரிக்கெட் உலகக்கிண்ணப்போட்டியின் இறுதி ஆட்டத்தில், பாகிஸ்தானைத் துவம்சம் செய்து இந்திய அணி தொடர்ந்து 2 ஆவது முறையாகச் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.


பார்வையற்றவர்களுக்கான 5 ஆவது உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியை பாகிஸ்தானும், ஐக்கிய அரபு அமீரக நாடுகளும் நடத்தின. இதில், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் ஆகிய அணிகள் பங்கேற்றன.

இறுதிப்போட்டிக்கு இந்தியா, பாகிஸ்தான் அணிகள் தகுதி பெற்றன. ஷார்ஜாவில் உள்ள கிரிக்கெட் மைதானத்தில் இறுதி ஆட்டம் நேற்று நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அதன் பின் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 308 ஓட்டங்கள் சேர்த்தது. பாகிஸ்தான் தரப்பில் பதர் முனிர் அரைச்சதம் அடித்தார். அந்த அணி வீரர்கள் ரியாசத் கான், அணித் தலைவர் நசரத் அலி ஆகியோர் முறையே 48,47 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து, 309 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 8 பந்துகள் மீதம் இருக்கையில், 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலக்கை அடைந்தது.

இதனால் , இரண்டாவது தடவையாக இந்தியா சம்பியனானது. (அ)



தலைமுடியால் ஹைஏஸ் வாகனத்தை பிரதீபன், பல்லால் உழவு இயந்திரத்தை எஸ். ஞானச்சந்திரன், படி ரக வாகனத்தை உடலால் 9 வயதான எஸ். ஜதுர்சிகா ஆகியோர் இழுந்துச் சாதனை படைத்தனர்.

பொலிகை பாரதியின் வருடாந்த இல்ல விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்விலேயே இந்த சாகச சாதனைகள் படைக்கப்பட்டன. (ச-66)

# கரவெட்டி கழகங்களின் எல்லே: உடுப்பிட்டி சிவகுமாரன் சம்பியன்





கரணவாய், ஜன. 21

கரவெட்டிப் பிரதேச பெண்களுக்கான எல்லே போட்டியில் உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சிவகுமரன் முதலில் துடுப்பெடுத்தாடி 6 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் சார்பில் அபிநயா 2 ஓட்டங்களையும் சொப்னா நிலக்ஸனா துஷாரா ஸ்ரீரஞ்சினி ஆகியோர் தலா ஒரு ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு 7 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய அல்வாய் மனோகரா அணி எந்த ஓட்டங்களையம் பெறவில்லை. இதனால் சிவகுமரன் விளையாட்டுக்கழகம் சம்பியனானது. (ச-66)

# ஒரு ஓவரில் 37 ஓட்டங்கள்



கேப்டவுன்,ஜன.21

தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் ஜேபி டுமினி, முதல் தர கிரிக்கெட் போட்டி ஒன்றில் ஒரே ஓவரில் 37 ஓட்டங்கள் விளாசி புதிய சாதனை படைத்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் முதல் தர போட்டியில், கேக் கோப்ராஸ் அணிக்காக டுமினி விளையாடி வருகிறார்

இந்நிலையில் நைட்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 240 ஓட்டங்கள் இலக்கினை விரட்டியது கோப்ராஸ் அணி. அந்த அணியில் களம் இறங்கிய டுமினி, 36 ஆவது ஓவரில் எடி லெயி வீசிய பந்துவீச்சை சிதறடித்தார்.

முதல் நான்கு பந்துகளை சிக்ஸர்களாக விளாசிய டுமினி, ஐந்தாவது பந்தில் இரண்டு ஓட்டங்கள் எடுத்தார். கடைசி பந்தை பவுண்டரிக்கு அவர் விளாசிய போது, நடுவர் அந்த பந்தை 'நோ போல்' என்று அறிவித்தார்.

இதனால் மீண்டும் ஆறாவது பந்தை எதிர்கொண்ட டுமினி, அதனை இம்முறை சிக்ஸராக மாற்றினார்.

இதன் மூலம் ஒரே ஓவரில் 37 ஓட்டங்கள் சேர்த்து, உள்ளூர் போட்டி வரலாற்றிலேயே ஒரே ஓவரில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

சிறப்பாக விளையாடிய டுமினி 37 பந்துகளில் 70 ஓட்டங்களை குவித்து, கோப்ராஸ் அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.(அ)




இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 21.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.